# ‘கலைஞர் மகளிர் உரிமைத்தொகை’ நாட்டிற்கே முன்னோடி!

## நிதிநிலை அறிக்கை... 3ஆம் பக்கத் தொடர்ச்சி

மாலத்தீவுகள், கனடா, மியான்மர், மலேசியா, இலங்கை, பிரான்சு, ஜெர்மனி, நார்வே மற்றும் அமெரிக்கா ஆகிய 16 நாடுகளில் இருந்து 292 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் 15 நாட்களுக்கு தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலா, வரலாற்று மற்றும் பண்பாட்டுச் சிறப்புமிக்க இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, தமிழ்நாட்டின் கலை, பண்பாடு குறித்து விளக்கப்பட்டதன் மூலம், தத்தமது நாடுகளில் தமிழ்நாட்டின் பண்பாட்டுத் தூதுவர்களாக அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள்.

**இலங்கைத் தமிழர் நலன்**

15. முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் கண்ணியமாக வாழ்ந்திடும் வகையில், உயர்த்தப்பட்ட உதவித்தொகை, உணவுப் பொருட்கள், மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை, திறன் பயிற்சி, சுயஉதவிக் குழுக்களுக்குக் கடன் என அவர்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களுக்கென இதுவரை 456 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

16. கடந்த 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த இலங்கை மக்களுக்கு 197 கோடி ரூபாய் மதிப்பிலான 40,601 மெட்ரிக் டன் நிவாரணப் பொருட்கள் முதலமைச்சர் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டன. அதே போன்று, கடந்த ஆண்டு டித்வா புயலால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு 950 மெட்ரிக் டன் நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இவ்வாறு **முதலமைச்சரின் கருணை, கடல் கடந்தும் தாய்த்தமிழ் உறவுகளின் இன்னல்களைக் களைந்திட உதவியது**.

17. மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு புதிய நிரந்தர வீடுகள் கட்டித் தரும் திட்டத்தின் கீழ் மூன்று கட்டங்களாக மொத்தம் 10,469 வீடுகள் கட்டுவதற்கு 630 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில், 6,010 வீடுகள் கட்டுவதற்கான பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், மற்ற வீடுகளின் கட்டுமானப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன.

**மகளிர் நலன்**

**18. “பட்டங்கள் ஆள்வதும்**
**சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள்**
**நடத்த வந்தோம்”**

மகாகவி பாரதியின் பெருங்கனவை நனவாக்கி, மகளிரின் வாழ்வை மேம்படுத்திட, அவர்தம் மாண்பைப் போற்றிட அவர்களின் நலன் காத்திட மகளிரை தொழில்முனைவோராக உயர்த்திட பல முன்னோடித் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

19. தமிழ்நாடு அரசின் முத்திரைத் திட்டங்களில் முதன்மையானது **‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’**. இல்லங்களில் மகளிரின் உழைப்பை அங்கீகரிக்கும் வகையில், உரிமைத் தொகையாக ஆயிரம் ரூபாயை நேரடியாக அவர்களது வங்கிக் கணக்கிலேயே செலுத்திடும் இத்திட்டம் இந்தியாவிலேயே முன்னோடித் திட்டமாகத் திகழ்கிறது. ஏறத்தாழ ஒரு கோடியே 31 இலட்சம் மகளிர் பயன்பெறும் இந்த மகத்தான திட்டத்தைப் பிற மாநிலங்களும் பின்பற்றுகின்றன என்பதே இத்திட்டத்தின் வெற்றி என நாம் பெருமிதம் கொள்ளலாம்.

**20. நாடே போற்றும் இந்த மகத்தான திட்டத்தின் பலன்கள் எதிர்வரும் மாதங்களிலும் தடை இன்றி ஒரு கோடியே 31 இலட்சம் பயனாளிகளுக்கும் கிடைத்திடும் வகையில், அண்மையில், பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான உரிமைத் தொகை 3,000 ரூபாயும், கூடவே கோடைக்காலச் சிறப்புத் தொகுப்பாக 2,000 ரூபாயும் சேர்த்து, மொத்தம் ஐந்தாயிரம் ரூபாய் மகளிரின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்ட போது தமிழ்நாடே இன்ப அதிர்ச்சியில் உறைந்து போனது. கடந்த வெள்ளிக் கிழமையன்று, வைகறைப்பொழுதில், கதிரவன் உதித்துத் தன் பயணத்தைத் தொடங்கிய அதே வேளையில் ஆரம்பித்து, மூன்று மணி நேரத்திற்குள் ஒரு கோடியே 31 இலட்சம் மகளிரின் வங்கிக் கணக்கில் ஐந்தாயிரம் ரூபாய் உரிமைத் தொகை வரவு வைத்த போது இந்த நாடே திரும்பிப் பார்த்தது. மக்கள் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தனர்.**

**21. எதிர்காலத்தில் வரக்கூடிய தடைகளையும் நிகழ் நேரத்தில் கணித்து அவற்றையெல்லாம் தகர்த்து தன் குடிமக்களை காத்திடும் ஓர் உன்னத தலைவரைப் பெற்றது தமிழ்நாட்டு மக்களின் நல்வாய்ப்பு. மகளிர் மனம் குளிர, இல்லத்தரசிகளின் இதயங்கள் நெகிழ்ச்சியில் நிறைந்திடும் வண்ணம், ஒரே நாளில் ஏறத்தாழ 6,500 கோடி ரூபாய் நிதியினை தமிழ்நாடு எங்கும். ஏழை. எளியவரின் கரங்களில் தவழச் செய்த, எங்களின் முறை செய்து காப்பாற்றும் மன்னவனாகிய முதலமைச்சர் அவர்களுக்கு கோடானு கோடி மங்கையரின் சார்பாகவும். இம்மாமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் என் நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.**

22. மகளிரின் பயணச் செலவிற்கான சுமையைக் குறைத்திடவும். அவர்கள் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கவும். அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் செல்ல வழி வகுக்கும் ‘விடியல் பயணம்’ திட்டத்தின் மூலம், இதுவரை 881 கோடி முறை பாதுகாப்பான பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளனர். இதனால், சராசரியாக மாதம் ஒன்றுக்கு 888 ரூபாய் வரை சேமிப்பை நமது மகளிர் பெறுகிறார்கள்.

23. மகளிர் கல்வியைப் போற்றிப் பாதுகாத்திட, பள்ளிக் கல்வியிலிருந்து உயர்கல்வி வரை தொடர்ந்திட, இவ்வரசு செயல்படுத்தியதே உயர்கல்விக்கு உதவிடும் **‘புதுமைப்பெண் திட்டம்’**. ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்ற மாணவியர், அவர்தம் உயர்கல்வி கற்றலை மாதந்தோறும் 1000 ரூபாய் வழங்கி ஊக்கப்படுத்தும் இத்திட்டத்தின் கீழ் இதுவரை 6,95,296 மாணவியர் பயன் பெற்றுள்ளனர்.

24. மகளிரின் தற்சார்பு வாழ்வுக்கு வழிகோல, 1989 ஆம் ஆண்டில் மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் கண்டார் முத்தமிழறிஞர் கலைஞர், அவர் வழியில் நடைபோடும் இவ்வரசு. அவ்வியக்கம் தழைத்தோங்கிச் செழித்திடும் வகையில், இதுவரை 6,23,529 சுயஉதவிக் குழுக்கள் 141.718 கோடி ரூபாயை வங்கிக் கடனுதவியாக பெற்றுப் பயனடைந்திட வழிவகை செய்துள்ளது. சுய உதவிக் குழு மகளிரின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையைப் பெருக்கிட, **‘வாழ்ந்து காட்டுவோம்’** முதலான சீர்மிகு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.




25. கிராமப்புறப் பகுதிகளில் பயின்று கல்வி பெற்று. பணிவாய்ப்பின் பொருட்டு நகரங்களுக்கு வரும் மங்கையர். பாதுகாப்பாக தங்கிட நவீன வசதிகளுடன் கூடிய 19 **தோழி விடுதிகள்** உருவாக்கப்பட்டுள்ளன. கைம்பெண்களின் கண்ணியமான வாழ்வை உறுதி செய்திட, கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. மகளிர் நலன் காக்கும் இத்தகைய திட்டங்கள் நாடெங்கும் பெரும் பாராட்டினைப் பெற்றதுடன், பல்வேறு மாநிலங்கள் இவற்றை பின்பற்றத் தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

26. மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைகளின் இறப்பைக் குறைக்கும் நோக்கத்தோடு மாநிலத்தில் **130 அவசரகால மகப்பேறு மற்றும் குழந்தைகள் பராமரிப்பு** மையங்கள் செயல்பட்டுவருகின்றன. கருவுற்ற தாய்மார்களையும், பச்சிளஞ்சிசுக்களையும் பராமரிப்பதில் தமிழ்நாடு அரசு முன்னோடியாகச் செயல்படுகிறது. அரசு மருத்துவமனைகளில் நிகழ்ந்திடும் பாதுகாப்பான பிரசவங்களில், தேசிய அளவில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. அதனால், மகப்பேறு இறப்பு விகிதம், ஒரு இலட்சம் மகப்பேறுக்கு 35 என்ற அளவிலும், சிசு இறப்பு விகிதம் ஆயிரம் சிசுக்களுக்கு 12 என்ற அளவிலும், தேசிய சராசரியைவிட மிகக் குறைவாகவே உள்ளது. ஆறு மாதம் வரை உள்ள குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டினைக் களைய **‘ஊட்டச்சத்தை உறுதிசெய்’** எனும் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. மேலும், அவர்களின் ஊட்டச்சத்துக் குறைபாட்டை சரிசெய்ய, பாலூட்டும் தாய்மாருக்கு ஊட்டச்சத்துப் பெட்டகங்கள் வழங்கப்படுகின்றன.

27. பணிபுரியும் மகளிர் தம் பாலகரைப் பரிவுடன் பராமரிக்க உதவிடும் வகையில், அவர்கள் பணிபுரியும் தொழிற் பூங்காளிலேயே குழந்தைகள் காப்பகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நெருக்கடி நேரங்களில் பெண்களின் இடுக்கண் களைந்து உடனடியாக உதவிட, **“காவல் உதவி”** செயலி நடைமுறைக்கு வந்துள்ளது. ஆலயங்களில் ஆண் பெண் வேற்றுமையைக் களைந்திடும் வகையில், அகிலம் அறிய ஆன்மிகத் துறையில் பெண்களுக்கும் வாய்ப்பு வழங்கும் வகையில், பெண் ஓதுவார் நியமனம் நமது அரசின் மகத்தான சாதனையாகும். தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பை ஊக்குவிக்கவும். அவர்களுக்கு உரிய அதிகாரமளித்திடவும். **‘தமிழ்நாடு பெண்கள் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் (TNWeSafe)** உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

28. பெண்கள் பெயரில் பதிவு செய்யப்படும் 10 இலட்சம் ரூபாய் வரை மதிப்புள்ள வீடுகள், மனைகள் மற்றும் விவசாய நிலங்கள் உள்ளிட்ட அசையாச் சொத்துகளுக்கு கடந்த ஏப்ரல் 2025 முதல் பதிவுக்கட்டணம் ஒரு சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், 3,71,705 நபர்கள் இதுவரை பயனடைந்துள்ளனர். மகளிரின் பாதுகாப்பிற்காகவும், அவர்கள் தன்னம்பிக்கையுடன் தலைநிமிர்ந்து வாழவும், தன்னிறைவுடன் தனது வாழ்வை வடிவமைத்திடவும் **‘இளஞ்சிவப்பு ஆட்டோ’** வழங்கும் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. பணிபுரியும் பெண்களை கௌரவிப்பதன் மூலமும், அவர்களது தொழில்முறை வெற்றியை வளர்த்தெடுப்பதற்கான உத்தியுடன் கூடிய முன்முயற்சிகளை செயல்படுத்துவதன் மூலமும், **நாடு முழுவதும் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 41 சதவீதம் பேர் தமிழ்நாட்டின் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்கள் என்ற பெருமையை நாம் அடைந்துள்ளோம்** என்பது குறிப்பிடத்தக்கது.

**குழந்தைகள் நலன்**

29. **“கல்விபெறத் துடிப்போருக்கு, அவர்கள் ஏழை என்பதால் கல்வி தடைப்படாமல் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டியது. நல்லெண்ணம் உடையோரின் கடமையாகும்”** எனும் பேரறிஞர் அண்ணாவின் கருத்தைச் சிந்தையில் தாங்கிச் செயல்படுகிறது இந்த அரசு.

30. குடும்பச் சூழல் காரணமாக, அதிகாலையில் பள்ளிக் குழந்தைகளுக்கு உணவிட இயலாத ஏழை எளிய தாய்மார்களின் துயரம் துடைத்து. கனவுகள் நிரம்பிய நெஞ்சுடன் கல்விச் சாலையில் அடியெடுத்துவைக்கும் அவர்தம் குழந்தைகள் பசித்த வயிற்றுடன் பாடம் படிக்க வரும் நிலையினை மாற்றி, பசி நீங்கி, ஊட்டம் பெற்று, உற்சாகத்துடன் பயின்றிட வகை செய்கிறது **‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’**. இத்திட்டத்தால் குழந்தைகளின் வருகை அதிகரித்துள்ளது: கற்றல் திறன் மேம்பட்டுள்ளது. 19.34 இலட்சம் மாணவர்கள் பயனடையும் இத்திட்டத்திற்கென, கடந்த நான்கு ஆண்டுகளில் 1284 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

31. பெற்றோரை இழந்த குழந்தைகளை அரவணைத்துப் பாதுகாத்திடும் வகையிலும், அக்குழந்தைகள் இடைநிற்றல் இன்றி 18 வயது வரையிலான ‘பள்ளிப்படிப்பினைத்’ தொடர, மாதம் 2000 ரூபாய் வழங்கும் **‘அன்புக் கரங்கள்’** திட்டத்தின் கீழ், இதுவரை 10,637 குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர்.

**திருநங்கைகள் நலன்**

32. திருநங்கைகளின் தன்மான வாழ்வுக்கு உதவிடும் நோக்கத்தோடு, அவர்கள் சுயமாகத் தொழில் செய்வதை ஊக்குவிக்க, இந்த அரசு மானியம் வழங்கிவருகிறது. திருநங்கைகளுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் அவர்கள் ஊர்க்காவல் படையில் சேர்ந்து பணிசெய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**மூத்த குடிமக்கள் நலன்**

33. முதுமையின் துயர் துடைக்க மூத்த குடிமக்களுக்குப் பகல் நேரப் பராமரிப்பு மையங்களாக **‘அன்புச் சோலைகள்’**, 25 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அண்மையில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயதுமுதிர்ந்தோர் சிரமமின்றி பொருட்கள் பெறவேண்டும் என்ற மேன்மையான நோக்கத்தில், அவர்களின் இல்லத்திற்கே பொருட்களை நேரடியாகக் கொண்டு சென்று விநியோகிக்கும் முறையினை, **‘தாயுமானவர் திட்டத்தின்’** கீழ் இந்த அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 27,40,703 தகுதியுடைய பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

**மாற்றுத்திறனாளிகள் நலன்**

34. “Democracy is not merely a form of Government. It is primarily a mode of associated living, of conjoint communicated experience. It is essentially an attitude of respect and reverence towards fellow men.”

Dr. B.R.Ambedkar

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் இந்த அரசு, அவர்களுக்கு உரிய அதிகாரம் கிடைத்திடுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. நாட்டிலேயே முதல் முறையாக, உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளை உறுப்பினர்களாக நியமிக்கும் வகையில், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம். 1994 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 ஆகியவற்றில் உரிய திருத்தங்களை தமிழ்நாடு அரசு கொண்டுவந்துள்ளது. இதன் மூலம். உள்ளாட்சி அமைப்புகளில் இதுவரை 3,632 மாற்றுத்திறனாளிகள் நியமன உறுப்பினர்களாக பொறுப்பேற்றுள்ளனர். உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளின் குரல் உரக்க ஒலித்திடச் செய்யும் இந்நடவடிக்கை நாடெங்கும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

35. அரசு வேலைவாய்ப்பில். மாற்றுத்திறனாளிகளுக்கு 4 சதவீதம் இட ஒதுக்கீடு நேரடி நியமன முறையில் வழங்கப்பட்டு வரும் நிலையில், தற்போது பணி உயர்வு முறையிலும் இட ஒதுக்கீடு வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. தங்களைத் தாங்களே பராமரித்திட இயலாத மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்களுக்கு மாதந்தோறும் 2000 ரூபாய் பராமரிப்புத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித்தொகையினை 1000 ரூபாயிலிருந்து 1500 ரூபாயாக அதிகரித்ததன் மூலம் 8,52,680 மாற்றுத்திறனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

36. 2022 ஆம் ஆண்டில், 1,774 கோடி ரூபாய் உலக வங்கியின் உதவியுடன், ஆறு ஆண்டுகளில் செயல்படுத்தக்கூடிய **‘தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தினை (TN-RIGHTS)’** அறிமுகப்படுத்தி, அனைத்து துறைகளின் சேவைகளை, மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரே இடத்தில் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **‘புற உலகச் சிந்தனை இல்லாதோருக்கு’** ஒருங்கிணைந்த மறுவாழ்வுச் சேவைகளை வழங்கிடும் வகையில், உயர்திறன் மையம் ஒன்று சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது.

37. எல்லார்க்கும் எல்லாம் எனும் கொள்கைப் பாதையில் வழுவாது பயணித்திடும் இந்த அரசு, மாற்றுத்திறனாளிகள் மலர்ந்த முகத்துடனும், தன்மான உணர்வுடனும் தம் வாழ்வை நடத்திடும் வகையில், அவர்தம் நலனில் தனிக் கவனத்துடன் செயல்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகள் நலனுக்கு, 2021-22 ஆம் ஆண்டில் 814 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதி ஒதுக்கீடானது, 2025-26 ஆம் நிதியாண்டில் 1433 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது, மாற்றுத்திறனாளிகளின் நலன் காப்பதை, இந்த அரசு தலையாய கடமையாகக் கருதுவதை தெளிவாக்கும். இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாற்றுத்திறனாளிகள் நலத் துறைக்கு 1471 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வருவாய்த் துறை**

38. கடந்த ஐந்து ஆண்டுகளில் 23,56,623 நபர்களுக்கு. வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. **ஒருமுறை சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ்.** ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில், சென்னை மற்றும் அதன் சூழ் பகுதிகள் (Belt Area) மற்றும் மாநிலத்தின் இதர நகர்ப்புரப் பகுதிகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு, இதுவரை 77,800 இணைய வழி (Online) வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில், சென்னை மற்றும் அதன் சூழ் பகுதிகளில் 15,393 இணையவழி பட்டாக்களும், இதர மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் 62,407 இணையவழி பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன.

39. நவீன மின்னணு நில அளவைக் கருவிகளைப் பயன்படுத்தி **‘நிகழ்நேர இயக்கவியல்’ (Real Time Kinematics)** தொழில்நுட்பத்தின் அடிப்படையில் மறு நில அளவைப் பணி. கிருஷ்ணகிரி, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

40. சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழும் மக்களைப் பாதுகாக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. முதியோர் ஓய்வூதியம், மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியம். ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியம் போன்ற அனைத்து சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ், 35.33 இலட்சம் நபர்கள் பயனடைந்து வருகின்றனர். அனைத்து சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கும். இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 5,463 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




**பள்ளிக் கல்வி**

41. **‘அறிவை விரிவு செய், அகண்டமாக்கு’** என்று பாரதிதாசன் பாடியதிற்கிணங்க, கல்விச் செல்வத்தைக் குழந்தைகளுக்கு வழங்கி அறிவுச் சமூகத்தைப் படைத்திடும் நோக்கத்தில், **‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’ ‘இல்லம் தேடிக் கல்வி, புதுமைப் பெண்’, ‘தமிழ்ப் புதல்வன், ‘கல்லூரிக் கனவு’, ‘எண்ணும் எழுத்தும்;நான் முதல்வன்’** போன்ற முத்தான பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

42. அரசுப் பள்ளிகளுக்குத் தேவையான வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிப்பறைகள் ஆகியவற்றைப் போதுமான அளவில் அமைத்து. கல்விக் கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில் செயல்படுத்தப்பட்டு வரும் **‘பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்’** கீழ், 3,771 வகுப்பறைகள், 107 ஆய்வகங்கள், 4 ஆண்கள் விடுதிகள் மற்றும் 4 பெண்கள் விடுதிகள் ஆகியவை 673 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு, திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், 2,009 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள் நடைபெற்று வருகின்றன.

43. சூழலியல், தலைமைத்துவம், மனித உரிமை, சமூகநீதி, பெண்ணுரிமை ஆகிய கருத்தாக்கங்களின் அடிப்படையிலான பயிலரங்குகள் நடத்தும் முயற்சி, **‘கோடைக் கொண்டாட்டம்’** எனும் நிகழ்வின் மூலம் முன்னெடுக்கப்பட்டது. ஐவகை நிலங்களின் பெயரில் குழுக்கள் அமைத்து, மாணவர்தம் தலைமைத்துவப் பண்பை முகிழ்த்தெழச் செய்ய, **‘மகிழ் முற்றம்’** எனும் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது.

44. மாணவருக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் நலம் பேண, ஆசிரியர்களுக்கான முழு உடல் பரிசோதனைத் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. பிற மாநிலங்களிலும், குறிப்பிட்ட சில உலக நாடுகளிலும் உள்ள கல்விச்சூழலை அறிந்துகொள்ள, மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கென சிறப்பு சுற்றுலாத் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

45. சென்னையில் நடத்தப்படும் **பன்னாட்டுப் புத்தகக் காட்சி.** தமிழை உலகமொழியாக்கும் மிகச் சிறந்த முயற்சியென அனைவராலும் வரவேற்கப்படுகிறது. அறிவார்ந்த புலவர்கள் கூடி விவாதிக்கச் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் உருவாக்கப்பட்டுள்ள **கலைஞர் நூற்றாண்டு நூலகம்** தென்தமிழ்நாட்டின் அறிவாலயமாகத் திகழ்கிறது. அறிவைப் பரவலாக்கும் முன்முயற்சியில், கோயம்புத்தூர், திருச்சி, கடலூர், சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகரங்களில், மொத்தம் 902 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன நூலகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மாவட்டந்தோறும் நூலகங்களை மேம்படுத்தி, அறிவார்ந்த தமிழ்ச் சமூகத்தை உருவாக்குவதில் முனைப்புடன் செயல்படுகிறது இந்த அரசு.

46. 202122 ஆம் கல்வியாண்டில், முதற்கட்டமாக கல்வியில் பின்தங்கிய 10 மாவட்டங்களில் உண்டு உறைவிட வசதியுடன் கூடிய மேல்நிலைப் பள்ளிகளாக **தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள்** நிறுவப்பட்டு, இன்று சென்னையில் உள்ள மாநில தகைசால் பள்ளியுடன், தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களிலும் மாதிரிப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. அரசுப் பள்ளி மாணவர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச அளவிலான வாய்ப்புகளை உருவாக்குதல், அவற்றை அணுகத் தேவையான கல்வி மற்றும் கலை ஆளுமைத் திறன் பயிற்சி போன்றவை வழங்குதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும். இத்திட்டத்தின் மூலம், கடந்த நான்கு ஆண்டுகளில் மொத்தம் 2,358 மாணவர்கள் 93 முன்னணி கல்வி நிறுவனங்களில், 50 விதமான துறைகளில் சேர்க்கை பெற்றுள்ளனர். இதில் 41 மாணவர்கள் தற்போது இந்திய தொழில்நுட்பக் கழகங்களில் (IIT) பயின்று வருகின்றனர். மேலும். 17 மாணவர்கள் ஜப்பான், தைவான், மலேசியா ஆகிய நாடுகளின் பல்கலைக்கழகங்களில் முழு கல்வி உதவித்தொகைகளுடன் உயர்கல்வி பயின்று வருகின்றனர். இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் பள்ளிக்கல்வித் துறைக்கு 48,534 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உயர்கல்வி**

47. கல்வியில் சிறந்த தமிழ்நாட்டில் உயர்கல்வி பயிலும் மாணவர்கள் பட்டப் படிப்புடன். தொழில்நுட்பப் பயிற்சியும் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாணவர்கள் அனைவரும் உயர்கல்வி வரை இடைநில்லாமல் கற்பதற்குரிய சூழலை உருவாக்கிட, தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயலாற்றி வருகிறது. இக்குறிக்கோள்களை எட்டிட கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகள், மாணவர்தம் தொழில்நுட்பத் திறன் மேம்பாடு, கல்வி உதவித்தொகைத் திட்டம் என பல்வேறு முன்னெடுப்புகளை நமது அரசு மேற்கொண்டு வருகிறது.

48. கல்லூரி மாணவர்கள். தம் தொழில்நுட்பத் திறனை வளர்த்துக் கொள்வதற்காக, **2,172 கோடி ரூபாய் செலவில் 10 இலட்சம் பேருக்கு மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்** முதலமைச்சர் அவர்களால் அண்மையில் தொடங்கி வைக்கப்பட்டு இதுவரை 6,75,888 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். அண்ணா பல்கலைக்கழகத்தை ஆசியாவின் முதன்மைப் பல்கலைக்கழகமாக மாற்றுவதற்காக 1,380 கோடி ரூபாய் செலவிலான முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

49. கலை மற்றும் அறிவியல், பொறியியல் மற்றும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக, **‘பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம்’** செயல்படுத்தப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் 909 கோடி ரூபாய் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விரைவாக மாறிவரும் தொழில்நுட்பங்களை பயன்படுத்திக்கொள்ளும் வகையில், 11 அரசுப் பொறியியல் கல்லூரிகளில் செயற்கை நுண்ணறிவு, அதி நவீன உற்பத்தித் திறன் முதலான 8 புதிய பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நம் மாணவர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரிகளில் திறன்மிகு மையங்கள் உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

50. உயர்கல்வியில் சமூகநீதியைப் பேணும் பொருட்டு, அரசுப் பள்ளியில் பயின்ற மாணவர்கள், தொழிற்கல்வி பயில, 7.5 சதவீதம் இட ஒதுக்கீட்டில் சேர்க்கை பெற்ற 54,301 மாணவர்களின் கல்வி மற்றும் உணவுக் கட்டணங்களை அரசே ஏற்று, இதுவரை 1512 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மேலும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 10.563 கூடுதல் இடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் 38 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உருவாக்கப்பட்டு, 18,760 மாணவர்கள் கூடுதலாகப் பயனடைந்து வருகின்றனர். தமிழ்நாடு அரசு உயர்கல்வியில் தொடர்ந்து மேற்கொள்ளும் முயற்சிகள் காரணமாக, நாட்டிலேயே உயர்கல்வி சேர்க்கையில் தேசிய சராசரியைவிட ஏறத்தாழ இரு மடங்காக 47 சதவீதம் பெற்று தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்

## 38 புதிய அரசு கலை, அறிவியல் கல்லூரிகள் உருவாக்கப்பட்டுள்ளன!

## தூய்மைப் பணியாளர்களுக்கு 30,000 வீடுகள்!